ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1782/26 - 2012 ඔක්තෝබර් 31 වැනි බදාදා - 2012.10.31
*1782/26 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள்

*நியதிச்சட்டமுறையான இல. 4626*
*விசேட இல. கொழும்பு/3440.*

### *1972 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டம்*

*13 ஆம் பிரிவின் கீழான நியதிச்சட்ட முறை விதிப்பு (பெயரளவிற்கு மட்டும்)*

*ஜாஎல, ஏகல, கொடுகொட, சீ 56 ஆம் இலக்க வீட்டில் வசித்து வந்த திருமதி லீலாவதி சண்முகத்தினால் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் நியதிச்சட்ட முறையானதொரு பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது அவர் காலமாகி உள்ளதால் சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இந்த ஆணைக்குழுவினால் நியதிச்சட்டமுறையான குத்தகைக்காரருக்கு சொந்தமாகவிருந்த கமத்தொழில் காணிகளில் அவர் வைத்திருக்க அனுமதி வழங்கவேண்டிய பகுதியை நிர்ணயித்து அவரின் மரணசாதனச் சொத்துக்கு சட்டமுறையானதொரு விதிப்பு விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நியதிச்சட்ட முறையான குத்தகைக்காரருக்கு வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்ட கமத்தொழில் காணிப் பகுதிகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.*

*சட்டத்தரணி நிமல் ஜீ. புஞ்சிஹேவா,*
*தலைவர்,*
*காணிச்சீர்திருத்த ஆணைக்குழு.*

*சீ. 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,*
*கொழும்பு 07,*
*2012, ஒற்றோபர் 25.*

**அட்டவணை**

*1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தின் உடபலாத பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவின் கந்துகர மேல் கோரளை சிறு பிரிவின் மஹர (ஒரு பகுதி) 12 ஆம் பிரிவு. மஹர கம்பொல மாகாண அரச சபை பிரிவின் (மாகாண அரச சபையின் வெளிப் பகுதி) தெல்பிட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட ஆரம்ப வரைபட இல. மக/853 இல் காட்டப்பட்டுள்ளதுமான ஓர்வேல் எஸ்டேட் மற்றும் சவனெக் தோட்டம் எனும் காணிகளில் காணித்துண்டு இலக்கம் 2,3,4,5,6,7 ஆகிய காணித்துண்டுகளில் பிரிவிடாத 50 ஏக்கர் 0 ரூட் 0 பேர்ச்சஸ் அளவு கொண்ட 1 ஆம் இலக்க காணிப் பகுதிகளும் அதனுள்ளடங்கிய சகலதும்.*

*11-600*